Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 FEB 1913
MADRAS.

सत्यमेव जयति
THE MESSENGER OF TRUTH

# சத்திய தூதன்.

FEBRUARY, 1913. PRICE, 1 PIE.—விலை, க பை. பெப்ருவரி௴, 1913.

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

**மதுபான கிரகங்கள்.**—வேல்ஸைச் சேர்ந்த ஆங்கிலிஸி என்றவிடத்தில் 42 குரு விசாரணை ஸ்தானங்கள் உண்டு. ஆனால் மதுபான ஸ்தலம் ஒன்றுமில்லை.

**இசிவு ஜன்னி குணமாக்கப்பட்டது.**—லண்டன் நகர் செயின்ட் தோமாஸ் ஆஸ்பத்திரியின் ரணவைத்தியர் இசிவு ஜன்னி நேரிட்ட இரண்டு பேர்களுக்கு நிணநீர் பிரயோகித்து ஜன்னியைக் குணமாக்கினார்.

**டேலிபோனைக் கண்டுபிடித்தவர்.** — டெலிபோன் சூத்திரத்தை 1853–ஆம் வருஷத்தில் கண்டுபிடித்த எம். வி. பார்ஷியல் என்ற ஒரு பிரெஞ்சுக்காரர் மரணமடைந்துவிட்டார். அப்போது அவருடைய வயது 83.

**நான்கு சகோதரர்கள் நகராதிகாரி வேலையிலிருப்பது.** — பிரான்சுதேசத்தைச் சேர்ந்த டிகான் ஜில்லாவில் நான்கு சகோதரர்கள் அந்த ஜில்லாவின் நான்கு நகரங்களில் நகராதிகாரிவேலை பார்த்து வருகிறார்களாம்.

**மதுபானத்தினால் நேரிட்ட குற்றம்.**—பவேரியாதேசத்தில் சென்ற 1910–ஆம் ஆண்டு மதுபானத்தினால் நேரிட்டிருக்கும் கேசுகள் 8,814. இந்தக் கேசுகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது.

**சுரங்க வேலைகள்.**—சுரங்க வேலைகளில் முழு உலகத்திலும் வேலை செய்துவரும் மொத்த நம்பர்கள் 6,250,000; சென்ற 1910-ஆம் வருஷத்தில் முழு உலகத்திலும் வெட்டி எடுக்கப்பட்டிருக்கிற நிலக்கரியின் கிரயம் 420,000,000 பவுண்ட்.

**மதுபானத்தைக் குறைக்க ஒருபாயம்.**—ஜர்மனிதேசத்தில் மதுபானத்தைக் குறைப்பதற்காகக் கைத்தொழிற் சாலைகளின் சொந்தக்காரர்கள் தங்களுடைய வேலைக்காரர்களுக்கு கொள்முதற்படியே தேத்தண்ணீரை விற்றுவருகிறார்கள்.

**மரணத்துக்குச் செலுத்தவேண்டிய கட்டணங்கள்.**—வியன்னா பட்டணத்திலுள்ள பாரன் ராத்ஸ்சயில்ட் குடும்பம் சென்ற வருஷம் கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய 10 லட்சம் பவுண்ட் மரணவரி பண்டு செலுத்திவிட்டார்கள்.

**டாக்டர் ஜெமீசன்.**—திரான்ஸ்வால்தேசத்து ஐக்கிய கூட்டத்தாருக்கு அவயவமாயிருக்கிற டாக்டர் ஜெமீசன் என்பவர் தற்போது தனக்கு நேரிட்டிருக்கும் வியாதியைக் கருதி மகா மந்திர சபையிலிருந்து நீங்கிப்போக உத்தேசித்திருக்கிறாராம்.

**ஆஸ்போர்ன் காட்டேஜ்.**—ஐல் ஆவ் வெயிட் என்னும் தீவிலுள்ள ஆஸ்போர்ன் காட்டேஜில் பிரின்ஸெஸ் ஹென்ரி ஆவ் பாட்டன்பர்க் அவர்கள் சிலகாலமாக வசித்துக்கொண்டு வந்தார்கள். அந்த காட்டேஜ் தற்காலம் விலைக்கு வந்திருக்கிறது.

**பழைய பென்னிகள்.** — ஸ்டெப்கர்வி கோவிலை இடித்து வேலைசெய்துகொண்டிருக்கும்போது ஹென்றி III என்ற அரசர் ஆண்டகாலத்தில் 1248, 1272 இந்த வருஷங்களில் அச்சிடப்பட்ட 500 வெள்ளி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**பள்ளிக்கூடங்களில் படிக்கிற பெண்பிள்ளைகள்.**—ஜபான்தேசத்துப் பெண்பிள்ளைகளைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது அவர்களில் 100–க்கு 96 விழுக்காடு பள்ளிக்கூடங்களில் படித்துவருகிறார்கள். நமது இந்தியாதேசத்துப் பெண்பிள்ளைகளைக் குறித்து என்ன?

**2,300 நட்புக் கடிதங்கள்.**— ஆஸ்டிரேலியாதேசத்து மெல்போர்ன் பட்டணத்தில் பூர்த்தியாக 82 வயதாகிக் கலியாணமாகாமல் இறந்துபோனவனுடைய ஒரு பெட்டியில் ஆறு சிறுமிகளால் எழுதப்பட்டிருந்த 2,300 நட்புக் கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

**கட்டடங்கள்.**—கனடாதேசத்திலுள்ள மன்டிரீல் நகரில் சென்ற வருஷம் 3,314 கற்கட்டடங்கள் கட்டப்பட்டிருப்பதில் இருநூற்று அறுபத்து நாலு லட்சத்து முப்பத்தோராயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழு டாலர் பணம் செலவாயிருப்பதாகத் தெரியவருகிறது.

**ஸ்காட்லாண்ட் தேசத்தில் நடந்தேறிய விவாகங்கள்.** — ஸ்காட்லாண்ட் தேசத்தில் சென்ற 1910–ஆம் ஆண்டில் 15 வயதான நான்கு சிறுமிகளும், 16 வயதான 56 சிறுமிகளும், 17 வயதான 342 சிறுமிகளும், 18 வயதான 954 சிறுமிகளும் விவாகமடைந்தனரென்று தெரியவருகிறது.

**ஆபிரிக்காகண்டத்திலுள்ள வரிக்கழுதையின் நாவு.**—ஆபிரிக்காகண்டத்திலுள்ள வரிக்கழுதையின் நாவு வெகு நீளமாக (கடவுளினால்) சிருஷ்டிக்கப்பட்டிருப்பதினால் அது தன்னுடைய நாவை மரங்களின் கிளைகளில் மடிப்பு மடிப்பாக விட்டுப்பின் அதைத் தன் நாவுக்கு இழுத்துக்கொள்ளுமாம்.

**ஒரு பெரிய வயிரக்கல்.**—தென் ஆபிரிக்காதேசத்து "ரான்ட்" என்னும் வயிர சுரங்கங்களிலிருந்து 1,649 காரட் நிறையுள்ள ஒரு வயிரக்கல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கோழிமுட்டை பருமனாகத் தலையில் வெட்டப்பட்டிருப்பதோடு, 1,863 காரட் நிறையுள்ள கோஹினூருக்குக் குறைவுள்ளது

**ஆபில் பழத்தோட்டம்.**-யூனைட்டட்ஸ்டேட்ஸ் தேசத்திலுள்ள "பார்கர் ஆர்சார்ட்" என நாமகரணம் சூட்டப்பட்டிருக்கிற ஆபில் பழத் தோட்டம் 12,000 எகரா விஸ்தீரணமுள்ளதென்றும், அதில் 96,000 ஆபில் மரங்கள் நாட்டப்பட்டிருக்கிறதென்றும், அதி ர் கிரயம் சுமார் 600,000 டாலர் மதிப்பாகிறதென்றும் தெரியவருகிறது.

**புதிய கம்பியில்லாத டேலிபோன்.**—டாக்டர் ரிக்கார்டோ மொரிட்டி என்பவர் டெலிபோன் சூத்திரத்தில் கம்பியில்லாமல் ஒரு நூதனமான டெலிபோனைக் கண்டுபிடித்திருப்பதாகவும் அதை இதாலிதேசத்து அரசர் ரோமாபுரி பட்டணத்திற்கும், திரிப்போலிக்கும் போட்டுச் சமாசாரங்களை அறிந்துகொண்டுவருவதாகவும் தெரியவருகிறது.

**ரேயில்வே வண்டிகளை ஏககாலத்தில் பூட்டுகிற ஓர் கருவி.** — பீஸ்டன் பட்டணத்திலுள்ள வி. இ. கான்டிராட் கம்பெனியார் ரெயில்வே வண்டிகளை ஏககாலத்தில் பூட்டவும் திறக்கவும்கூடிய ஒரு கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இக் கருவியைக்கொண்டு கார்ட் எல்லா வண்டிகளையும் ஒரேசமயத்தில் சாத்தவும் திறக்கவும் கூடும்.

**1¼ மைல் நீளமுள்ள ரேயில்வண்டித்தொடர்.**—அமெரிக்காதேசத்து பென்சில்வேனியா ரெயில்வே அதிகாரிகள் 133 வண்டிகள் அடங்கிய ஒரு தொட

ளைக் கூட்டி, அவைகள் மூன்று இன்ஜின்களால் இழுக்கப்படும்படி செய்துவருகிறார்கள். அந்த வண்டிகளின் நீளம் 7,000 அடியாகிறது. அதாவது 1¼ மைல் நீளத்திற்கு அதிகம். உலகத்திலுள்ள வண்டித்தொடர்களில் இதுதான் முதன்மையானது.

**டாக்டர் லிவிங்க்ஸ்டன் என்பவரின் தோழன்.**—டாக்டர் லிவிங்க்ஸ்டன் என்பவர் ஆபிரிக்காகண்டத்தின் பல பாகங்களில் பிரவேசித்துப் பரிசோதனை செய்துகொண்டு போனபோது அவருடன் உழைத்த தோழர்களில் சர். ஜான் கிஸ்ட் என்பவர்மாத்திரம் உயிரோடிருக்கிறார். அவருக்குத் தற்போது 80 வயதாகிறது. இவர்தான் அடிமை வியாபாரத்தொழிலை நிறுத்தினதற்குக் காரணகர்த்தாவென்று சொல்லக்கூடும்.

**வெள்ளீரலும் ஆகாயமும்**—சுகத்தைப் பேணிக்கொள்ள நமது தேகத்திலுள்ள முழு வெள்ளீரலிலும் சுத்தமான ஆகாயம் பரிசிக்கும்பட்சத்தில் யாதொரு வியாதியும் உடலுக்கு நேரிடாது.

**கவர்னர் ஜெனரால்.**—லார்ட் ஹார்டிங் பிரபு தினத்துக்குத் தினம் சுகப்பட்டும் பலப்பட்டும் வருகிறார். வெடியெறிந்தவன் இன்னும் அகப்படவில்லை.

**டர்க்கி யுத்தம்.**—இந்தக் கடும் யுத்தம் இனி நிறுத்தப்படும். சமாதானமாய்விட்டது டர்க்கிக்கு கான்ஸ்தாந்திநோபில் தவிர ஐரோப்பாவிலே வேறு பூமி கிடையாது. ராஜ்யமெல்லாம் நமது ஆசியா கண்டத்திலே இருக்கும்.

# 1913.

## NEW YEAR.

## புதிய வருஷம்.


**சத்தியதூதனை** வாசிக்கும் என் நேயர்களுக்கு இப்புதிய வருஷ வாழ்த்துதல் கூறுகிறேன். கடவுள் கடந்த வருஷத்தில் நம்மோடிருந்து நமக்கு வரக்கூடிய எல்லாத் தீங்கிலிருந்தும், ஆபத்திலிருந்தும் காப்பாற்றி, அவர் தம்முடைய உக்கிராண வீட்டிலிருந்து உண்ண உணவையும், உடுக்க உடையையும் கொடுத்து, நம்முடைய நாசியிலே சுவாசத்தை நிறுத்தி, இப்புதிய வருஷத்தை ஜீவனோடு பார்க்கும்படி செய்த நம்முடைய பரம பிதாவாகிய கடவுளுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

கடந்த போன வருஷத்தில் நம்முடைய அநுபவத்தில் கண்ட சில சத்தியங்களை உணர்ந்து நமக்குப் படிப்பனையாக இவ்வருஷத்தில் கையாட வேண்டும்.

1. **நம்முடைய மதியீனம்.** நம்முடைய ஜீவியத்தில் எவ்வளவோ மதியீனம் காணப்பட்டிருக்கும். நாம் தங்கவேண்டிய இடத்தில் தங்காமலும், செய்ய வேண்டியதைச் செய்யாமலும் நம்முடைய பிரயாணத்தை அதிக மதியீனத்தோடு நடத்தியிருப்போம். நம்மைப் பிழைப்பூட்டி நாசியிலே சுவாசத்தை வைத்துக் காப்பாற்றின கடவுளில்விட உலகத்திலே அதிகப் பற்றுதலை வைத்திருந்தோம். உலகப்பொருள்களை அதிகமாய் நம்பி இருந்தோம். இப்படிப்பட்டவைகளைச் சுத்த மதியீனத்தினாலேயே அப்படிச் செய்துவந்தோம். நாம் காப்பாற்றப்பட்டது எதினாலே, உலக ஆஸ்தியாலல்ல, கடவுள் நம்மை ஜீவனோடு வைத்ததினால்தான். ஆகையால் நாம் நன்றியறிதலான இருதயத்தோடே இந்தப் புதிய வருஷத்தில் நம்முடைய பரம பிதாவைக் கிட்டிச் சேருவோமாக.

2. **நாம் மனுஷரை நம்பினோம்.** போன வருஷத்தில் நாம் கண்டுபிடித்த சத்தியம் என்ன? நாசியில் சுவாசமுள்ள அநேகரை நம்பினோம், வெளித்தோற்றத்தால் நல்லவர்கள் என்று நினைத்த அவர்கள் கெட்டவர்களாய்க் காணப்பட்டார்கள். நன்மையை அவர்களிடம் நாம் நாடினபோது தீமையைப் பார்த்தோம். அவர்களை நம்பினபோது நம்மை முழுதிலும் கைவிட்டார்கள். ஏமாற்றப்பட்டோம். இனியேது, அப்படிப்பட்டவர்களை நம்புவதில் யாதொரு பிரயோஜனமில்லை என்று சொன்னோம். ஆகையால் இவைகளை நாம் உணர்ந்து, நம்முடைய பரம பிதாவாகிய கடவுள் ஒருவரையே நம்பி, அவரையே சேவிக்கப் பிரயாசப்படுவோமாக. அவர் ஒருவரே நம்முடைய சிநேகிதரும், அன்பரும், ஆபத்துக்காலத்தில் உதவிசெய்கிறவருமாயிருக்கிறார்.

3. **விழுந்த அநேகர் நமக்கு எச்சரிப்பு.** கடந்த வருஷத்தில் எத்தனையோ பலவான்கள், தனவான்கள், கனவான்கள் விழுந்துபோனார்கள். மரணத்



பார்லிமெண்ட் மண்டபம்.

திற்கு இளையாய்ப்போனார்கள். இது நம்முடைய கண்கண்ட காட்சி. மரணம் நமக்கும் திடீரென்று வரும். நமக்கு ஏன் வம்பும் தும்பும்? கர்வமும் வீண்பெருமையும் என்னத்திற்கு? நம்மைத் தாழ்த்தி நல்ல குணத்தை அடைந்து, நமக்குக் கடவுள் கொடுக்கிற நாள்மட்டும் அவருடைய நாமத்திற்கு மகிமையாக ஜீவித்து, நம்முடைய ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிப்போமாக.

**4. கடந்துபோன வருஷத்தினால் நமக்குண்டான ஆதாயம்.** தேசசரித்திரம், ஜாதிகளின் அழிவு, ராஜ்யங்களின் முடிவு, யுத்தத்தில் மடிந்த பலவான்களின் சாக்ஷி, ஜெயித்த வீரசிகாமணிகளின் மாதிரி, மனுஷர்களுடைய பிரபலம், தவறுதல், விழுதல் எல்லாம் நமக்குப் படிப்பனை. இவைகள் மூலமாய் அறிவு விர்த்தியடைந்தது. மற்றவர்களால் அறிவில் தேர்ச்சியடைந்தோம்.

**5. மற்றவர்களுடைய ஆஸ்தி நம்முடையது.** முந்தின தலைமுறையாரின் பிரயாசத்தால் நாம் ஆஸ்திக்காரர்களானோம். புஸ்தகசாலையில் உள்ள புஸ்தகங்கள் நம்முடையதல்ல, மற்றவர்களுடைய பிரயாசை. நீராவி மரக்கலம் நாம் உண்டுபண்ணவில்லை, மற்றவர்களுடைய பிரயாசை. இருப்புப்பாதை வண்டித்தொடர் நம்முடையதல்ல, மற்றவர்கள் பிரயாசையினால் நம்முடைய வசதிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் ஆஸ்திக்காரர்.

**6. நாம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.** இலவசமாய் அநேக நன்மைகளைப் பெற்ற நாம், நம்மைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மற்றவர்களிடத்திலிருந்து இலவசமாய்ப் பெற்றதை இலவசமாய் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். கடவுளுடையதை கடவுளுக்கும், ராஜனுடையதை ராஜனுக்கும், மனுஷனுடையதை மனுஷனுக்கும் கொடு. இந்தப் புதியவருஷம் நம்மெல்லாருக்கும் ஆசீர்வாதமாய் இருக்கவேண்டுமானால் முற்கூறிய காரியங்களைக் கவனித்து நடப்போமாக. உங்கள் எல்லாருக்கும் புதிய வருஷ வாழ்த்துதல் கூறுகிறேன்.

## HINDUISM.

## ஹிந்துமார்க்க அக உதாரணங்களின் பரீட்சை.

(தொடர்ச்சி.)

வேதாந்தக் கொள்கையைக் குறித்தது.

வேதாந்தக் கொள்கையில் சாங்கியம், நியாயம் என்ற வேறிரண்டு வகையுண்டென்று சொன்னோமே, அவைகளில் சாங்கியமானது கபிலர் என்று பேர்போன ஒரு பூர்வீக வித்துவானாலே ஏற்படுத்தப்பட்டது. இதிலடங்கிய கொள்கைப்படி புத்தியும் சித்தமுமில்லாத சடப்பொருளாலேயே உண்டானதாம். இப்படியாகக் கபிலருடைய கொள்கை உலகாயிதமென்று சொல்லப்படும் நாஸ்திக வகைப்பாடுள்ளதென்று சொல்லவேண்டும்.

நியாயமென்று சொல்லப்படுகிற வகையுள்ளது முன் சொல்லப்பட்ட மற்றவைகள்போல் அவ்வளவான விகற்பமுள்ளதல்ல என்று தோன்றும். கடவுள் ஒருவர் உண்டென்றும், அவருக்குப் புத்தி, சித்தம், சக்தியுண்டென்றும், அவருக்கும் மற்ற வஸ்துக்களுக்கும் வேற்றுமையுண்டென்றும் ஒத்துக்கொள்வார்கள். ஆனாலும் இந்தக் கொள்கையில் கடவுளுடைய நீதி, பரிசுத்தம்முதலிய இலட்சணங்களைக்குறித்தும், அவர் உலகத்தை ஆளுகிற அதிகாரத்தைப்பற்றியும் ஒன்றும் சொல்லப்படாதிருக்கிறது அக்கொள்கைக்கு முக்கிய குறைவு.

இப்படி ஹிந்துக்களுடைய சாஸ்திரக் கொள்கைகளை ஆராயும்போது அவைகளை எழுதின வித்துவான்கள் தங்கள் திராணிக்கு மிஞ்சின விஷயங்களில் பிரவேசித்து, தங்கள் மனதில் தோன்றினபடி அநேகவித வீண் எண்ணங்களைச் சாதித்து, தங்களையும் மற்றவர்களையும் வஞ்சித்தார்களென்பதுபோலக் காணப்படும். சத்தியவேதத்தில் சொல்லியபடி "உலகத்தார் தங்கள் சொந்த ஞானத்தினாலே கடவுளை அறியவில்லை." கடவுளையும் அவருடைய சித்தத்தையும் அறிய விரும்புகிறவன் அவர் அருளிய மெய்வேதத்தை வாசித்து அறியவேண்டும். கடவுள் தம்மை இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். கடவுள் தம்மைப் பூரணமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். கடவுளுடைய நீதி, பரிசுத்தம், அன்பு யாவற்றும் இயேசுகிறிஸ்துவுக்குள் பூரணமாய் வெளிப்படுகிறது. இயேசுகிறிஸ்து கடவுளுடைய தத்துவத்தின் நிறைவெல்லாம் உடையவர்.

தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக இயேசுகிறிஸ்துவுக்குள் வாசமாயிருந்தது. ஆகையால் "இயேசுகிறிஸ்து மாமிசத்தில் வெளிப்பட்ட தேவன்." "கிறிஸ்துவாகிய மாமிசத்திலே, கடவுள் வெளிப்பட்டார்." இயேசுகிறிஸ்து சொல்லுகிறதைக் கவனியுங்கள்: "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்." "நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்." "என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமல் இருப்பான்." "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்." "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." "நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்" என்று சொன்னார். இயேசுகிறிஸ்து கடவுளுடைய உள்ளத்தையும், சைதன்யத்தையும் மனுஷர்களுக்குக் காண்பிக்கிறார். கடவுளுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம், நாம் நடக்கவேண்டிய விதம், கடவுளோடு நாம் ஐக்கியப்படுகிற விதம், அவரோடு பேசி உறவாடுகிற விதம் எல்லாவற்றையும் இயேசுநாதர் காண்பித்திருக்கிறார். ஆகையால் நம்முடைய சொந்த ஞானத்தினால் கடவுளை அறியும்படி பிரயாசைப்படுவதை விட்டு, இயேசுநாதர் காட்டிய வழியில் நின்று, கடவுளை அடைய பிரயாசைப்படுவோமாக.

(இன்னும் வரும்.)

## A CHRISTIAN'S COMFORT.

## கிறிஸ்தவனுக்கு ஆறுதல்.

TUNE: "While the days are going by."

Sacred Songs and Solos. New 802; Old 323.

1. துன்பம் உன்னைச் சூழும்போது
 கருத்துடன் ஜெபஞ்செய்;
இன்பமற்றுப் போகும்போது
 கருத்துடன் ஜெபஞ்செய்;
தேற்ற ஓராளுமின்றி
வேற்றாளாய்ப் போகும்போது
**கிறிஸ்தேசுவை** நம்பி
 கருத்துடன் ஜெபஞ்செய்.
 ஜெபஞ்செய், ஜெபஞ்செய்;
 ஜெபஞ்செய், ஜெபஞ்செய்;
 **கிறிஸ்தேசுவை** நம்பி
 கருத்துடன் ஜெபஞ்செய்.

2. நீ நேசித்தோர் பகைத்தாலும்
 கருத்துடன் ஜெபஞ்செய்;
உன் இனத்தார் கைவிட்டாலும்
 கருத்துடன் ஜெபஞ்செய்;
குற்றங்கள் உன்மேல் சாட்டி,
பற்றறப் பழித்தாலும்
**கிறிஸ்தேசுவை** நம்பி
 கருத்துடன் ஜெபஞ்செய்.

3. கையில் காசில்லையானாலும்
 கருத்துடன் ஜெபஞ்செய்;
மெய்வருத்தம் மேலிட்டாலும்
 கருத்துடன் ஜெபஞ்செய்;
வாலிப பலங்குன்றி
தீரா ரோகியானாலும்
**கிறிஸ்தேசுவை** நம்பி
 கருத்துடன் ஜெபஞ்செய்.

P. B.

'Paradise Lodge,'
**Royapuram**, Madras,
*1st January*, 1913.

## KAMBAN THE POET.

## கம்பநாடர்.

விராதன் துதியில்

கடுத்தகராம் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி,
உடுத்ததிசை அனைத்தினும்சென் றொலிகொள்ள உறு
துயரால், அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பர
மேஎன், றெடுத்தொருவா ரணமழைக்க நீயோஅன்
றேனென்றாய்?

என கஜேந்த்ரோபாக்யானத்தைக் குறித்ததில், 'ஏன் என்றாய்' என்றதனால், "மற்ற தேவர்கள் யானையின் இன்னலைக் கேட்டும் வாளா இருந்தனர். பரமே என்றபோது, தாங்கள் க்ஷுத்ர தேவதைகளாதலின் கஜேந்த்ரன் அழைப்பது தம்மை அன்றென வாளா இருந்தனர். அவர்களெல்லாம் ஏனென்றுதானுங் கேளாத பாவிகள். திர்யக்கான ம்ருகத்தை ஏனென்று வந்து ரக்ஷித்த நீ என்னை ரக்ஷிக்காமல் விடுவாயோ" என்று இங்ஙனம் இனமான பல பொருள்கள் தோன்ற நிற்பது ப்ரத்யக்ஷம்.

**காவ்ய பாத்ரங்களின் மனநிலைக் கியைந்தவாறு கவிகளை இயைப்பது** காவ்யங்களில் பொருட்சுவை சிறத்தலான உபாயம். காளிதாஸன் ஷேக்ஸ்பியர் முதலிய நாடக கவிகளைப்போல் கம்பரும் தமது காவ்யத்தில் சில ஸந்தர்ப்பங்களில் இந்த மர்மத்தை அநுஸரித்திருப்பதனால், இவர் மனுஷ ப்ரக்ருதியை நுணித்தறிந்தவர் என்பது புலனாகின்றது.

சூர்ப்பநகை உவமை முதலிய உதவிகொண்டு சொல்லளவாகச் சொல்லக்கேட்டு இராவணன் ஸீதையின் ஸௌந்தர்ய லஹரியில் மயங்கியிருக்கையில் காணும் உருவெளித்தோற்றப் பகுதியை ஆராய்ந்து பார்ப்போம். ஒரு பொருளை நேரிற் கண்டவர்கள், பின் நனவில் கருதும்போது அதனைக் கண்டது கண்டவாறே சித்ரித்துக்கொள்வது கூடும்: கனவில் தோன்றினும் அப்பொருள் கண்டது கண்டபடியே தோன்றும். நேரில் காணாமல் ஒருவர் உரைப்பக் கேட்ட பொருள், கேட்ட உரையின் உதவியால், உரைத்தவர் உரைத்த ஆற்றலுக் கேற்ப, ஒருவாறு மனத்தில் சித்ரித்துக்கொள்வது கூடுமேயன்றி, உள்ளது உள்ளபடியே தோன்றுவது இல்லை.

அம்பும் அனலும் நுழையாக் கனவந்த காரத்
தும்பர் மழைகொண் டயலொப் பரிதாய துப்பின்
கொம்பர் குரும்பைக் குலங்கொண் டதுதிங்கள் தாங்கி
வெம்பும் தமியேன்முன் விளக்கெனத் தோன்று மன்றே.

மருளூடு வந்த மயக்கோ மதிமற்று முண்டோ
தெருளாதி தென்னோ திணிமை யிழைத்தாலும் ஒவ்வா
இருளூடிரு குண்டலம் கொண்டும் இருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்று மன்றே.

புடைகொண்டெழு ... ... ...
இடைகண்டிலம் அல்ல தெல்லா வுருவுந் தெரிந்தாம்.
விடறங்கிய கண்ணுடை யார்இவர் மெல்ல மெல்ல
மடமங்கைய ராய்என் மனத்தவர் ஆயி ஞரே.

இம்மூன்று செய்யுளும் இராவணன் கண்ட உரு வெளித்தோற்றம். மூன்ருவது செய்யுளில் "மெல்ல மெல்ல, மடமங்கையராய் என் மனத்தவர் ஆயினரே" என்று இராவணன் உரைக்கும் உரையின் உள்ளுறையை உள்ளுற நோக்குமிடத்தில், சூர்ப்பநகை காட்டிய உவமானங்களால் உவமேயங்களை ஒவ்வொன்ருக ஒன்ருேடொன்று பொருத்தி இராவணன் கருத்தில் அமைத்துக்கொண்ட உருவமே ஈண்டு வெளித்தோற்றமான ஸீதையின் தோற்றம் என்பதும், இங்கே ஸீதையின் வர்ணனை ப்ரத்யக்ஷபாவனையைத் தருவதின்று என்பதும், இச் செய்யுள்களை மேலோட்டாக ஓதுவார்க்கும் நன்கு புலப்படும்.

இங்ஙனம் தான் கண்ட உருவம் ஸீதையோ அன்ருே என்று ஐயுற்றவன், சூர்ப்பநகையை அழைத்து "இீங்நின்றவ ளாங்கொல் இயம்பிய ஸீதை?" என்று கேட்க, இராமானந்தபரவசையான அவள், இராவணன் கேட்கின்ற நோக்கத்தை அறியாது, தன்னையும் மறந்து, தனக்கு உருவெளித் தோற்றமாக,

செந்தாமரைக் கண்ணெடும் செங்கனி வாயினேடும்
சந்தார்தடந் தோளோடும் தாழ்தடக் கைக ளோடும்
அந்தார்அக லத்தொடும் அஞ்சனக் குன்ற மென்ன
வந்தான்இவ ஞகும்அவ் வல்வில் இராமன் என்ருள்.

(இன்னும் வரும்.) T. C. M.

## MEDITATIONS ON THE PASSION.

## திவ்ய ரட்சகரின் பாடுகளின் பேரில் ஒப்பாரி.

(தொடர்ச்சி.)

134. கொல்லவென்று சேவகர்கள்—குருசை யிறக்கிவைத்து
எல்லாருங் காணநம—தேசுவை யதிற்கிடத்தி.
135. கிடத்தியிரு கால்கரத்தில்—கெட்டியா யாணிதைத்து
மடக்கச் சிலுவையொடு—மதிமுகத்தைக் கீழே வைத்தார்.
136. வைத்ததின் பின்னூன்றி — வலதிடது பக்கமதில்
சுத்தனெடு வேறிரண்டு—சோரர் சிலுவைநட்டார்.
137. சோரரிரு பக்கம்நின்று—தூஷித்துக் கொண்டிருக்க
பாரி விருள்மூடப்—பகருவா ரென்பிதாவே.
138. பிதாவேயித் துர்ச்சனர்கள் — பிசகாகச் செய்கிறதை
எதென் றறியார்—இதயத்தெண் ணதிருப்பீர்.
139. எண்ண திருப்பீர் — எனமொழிந்த தைக்கேட்டு
அண்ணந்து பார்த்து—அவர்வலது பாகமதில்.
140. பாகத் திருந்தகள்ளன்—பகருவா னண்டேநீர்
போகும்ராஜ் யத்தடியேன்—போகவருள் தாருமென்ருன்.
141. என்ன இரக்கமுள்ள-வசையா சொல்வாராம்
இன்றைக்கென் ஞேபெர — தீசிலிருப்பை யென்ருர்.
142. தீசிலிருப்பை யென்று-திருவா யுரைத்திடவும்
மாசில்லா நாதன்—மரத்தடியி லந்நேரம்.
143. நேரத்தி லங்குநின்ற—நிஷ்டூரர் கூட்டமொடு
ஆரணியத் தன்னைமரி—யம்மாளும் வந்துநிற்க.
144. நிற்கவே தாயாரும்—நேசமுள்ள யோவானும்
கற்பகஞ் சேர்வாயாற்—கனிந்துரைப்பா ரிஸ்திரீயே.
145. ஸ்திரீயே யீதோ—இவனுன் மகனெனவும்
உத்தம வென்சிஷா—உனக்கிவள்தா யாரெனவும்.

(இன்னும் வரும்.)

## THE DECALOGUE IN VERSE.

## தசப்பிரமாண விளக்கம் (தொடர்ச்சி).

முத்திக்கவி— களவு.

பல்லவி.

முத்தி கிடையாதடா—ஒருக்காலும்
முத்தி கிடையாதடா.

சரணங்கள்.

38

சொத்தைச் சுகத்தைச் சுயாதீனம் நற்புகழை
எத்திக் கவருகின்ற ஈனத் திருடருக்கு— முத்

39

வஞ்சகவர்த் தகம்பண்ணி மாயாண்டி வேஷமிட்டு
லஞ்ச மநீதிவட்டிப் பொன்சேர்த்து வாழ்பவர்க்கு —முத்

40

பந்தயஞ் சூதாட்டம் பாவாசை லாட்டரியில்
குந்தியிருந் தாதாயம் கொள்ளுகின்ற சோம்பருக்கு —முத்

41

அறிந்த விலைப்பொருளை யவசரக் காரரிடம்
குறைந்த விலைகொடுத்துக் கொள்ளுந் திருடருக்கு —முத்

42

வறியர் எளியவர்மேல் வன்கண்மை யாயிருந்து
திரவிய மேகுவிக்குந் தீய பிசினிகட்கு— முத்

43

ஓதுந் திருமறையை உலகில் பரப்புதற்கு
ஏதுங் கொடாம விறுமாந் திருப்பவர்க்கு— முத்

44

வீணைப் பிறர்புகழ விருப்போடு கேட்டிருந்து
நாணமற் றேபெருமை நாடுந் திருடருக்கு— முத்

45

நாவா லெழுத்தால் நடையுடை பாவனையால்
ஓவாப் புகழ்படைக்கு மாயத் திருடருக்கு— முத்

46

ஆட்டுத்தோல் மேல்வேஷம் அகத்திலோ நாய்வே[ஷம்
கூட்டித்தன் னயநாடுங் குருக்களடியாருக்கு—முத்

47

மந்தையைத் திருடவந்த மதிகெட்ட அலகையைச்
சிந்துதிரப் போர்புரிந்து ஜெயித்தானைச் சேரார்க்கு —முத்

(இன்னும் வரும்.) G. S. V.

## NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, Tract Dépôt, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

## BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DÉPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சந்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

### புதிய புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிலுவைத் திருவாசகம் ... ... ... ... | 0 | 1 |
| சுவிசேஷக் கீர்த்தனைகள் ... ... ... ... | 0 | 3 |
| எக்காலக் கண்ணி ... ... ... ... ... | 0 | ½ |
| எபேசியர் நிருப வியாக்கியானம் ... ... | 0 | 4 |
| கிறிஸ்துவின் ஜெப பாடசாலை ... ... ... | 0 | 12 |
| கிறிஸ்துவில் நிலைத்திருங்கள், 2–ம் பதிப்பு ... | 0 | 8 |
| விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல் ... ... | 0 | 8 |
| கிரணமாலிகை ... ... ... ... ... | 0 | 6 |
| வேத அகராதி (இரண்டு பாகம்) ... ... | 1 | 0 |
| ஆடவர் கும்மி ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 0 | 3 |
| திருச்சபை சரித்திரம் ... ... ... ... | 1 | 4 |
| ஆதியாகம வியாக்கியானம்... ... ... ... | 0 | 9 |
| வேதோபகரணம் ... ... ... ... ... | 0 | 10 |
| அன்ருட வேதவாசிப்புத் தியானம் ... ... | 0 | 8 |
| மாதர் கும்மி... ... ... ... ... ... | 0 | 1 |
| ஜெசிக்காளின் முதலாம் ஜெபம் ... ... ... | 0 | 1 |
| காலை தியானம் ... ... ... ... ... | 0 | 8 |
| இயேசுகிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ... ... | 0 | 8 |
| பரதேசியின் மோட்ச பிரயாணம் ... ... | 0 | 14 |
| உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள். | 0 | 3 |
| மாலை தியானம் ... ... ... ... ... ... | 0 | 8 |
| சற்குரு சதகம் ... ... ... ... ... | 0 | 1½ |
| கெட்ட குமாரன் சரிதை ... ... ... ... | 0 | 1 |
| பரிசுத்த ஜீவியம் ... ... ... ... ... | 0 | 2 |
| இரட்சிப்பு: அதின் நிச்சயம் அதின் சந்தோஷம். | 0 | ½ |
| ஆத்தும ஆதாயம் ... ... ... ... ... | 0 | 1 |
| கிறிஸ்தவ ஜீவிய விளக்கம் ... ... ... | 0 | 1 |
| மார்க்க எழுப்புதல் ... ... ... ... ... | 0 | 1 |
| பெந்தெகொஸ்தே ஆவி ... ... ... ... | 0 | 2 |
| சிறந்த தேவ ஊழியன்... ... ... ... ... | 0 | 1 |
| புதிய ஞானப்பாட்டுகள், சிறிய பதிப்பு ... | 0 | 3 |
| ,, ,, பெரிய பதிப்பு ... ... ... | 0 | 4 |
| ,, ,, நல்ல கட்டடம் 6 அணு, 7 அணு. | | |
| ,, ஞான கீதங்கள் பெரியது... ... ... | 0 | 10 |
| கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்... ... ... ... | 0 | 2 |
| மூதேவி சீதேவி வீடுகள் (ஓர் கதை) ... ... | 0 | 1 |
| சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது). | 0 | 14 |
| சிறிய ஞான கீதங்கள் ... ... ... ... ... | 0 | 4 |
| திருப்போர் (Holy War), புதுப்பதிப்பு... ... | 0 | 12 |
| மத்தேயு சுவிசேஷ வெண்பா (சாமிநாதபிள்ளை இயற்றியது) ... ... ... ... ... | 0 | 9 |

☞ தபாற்கூலி வேறே.

## பெப்ருவரிமாீ பஞ்சாங்கம்.—

| வாரம். | பெப்ருவரிமீ =தை—மாசி. ⊙ பௌர்ணமி, 22உ ● அமாவாசை, 5உ | | | | | தை—மாசி. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஞாயி ... | ... | 2 | 9 | 16 | 23 | ... | 21 | 28 | 5 | 12 |
| திங்க... | ... | 3 | 10 | 17 | 24 | ... | 22 | 29 | 6 | 13 |
| செவ் ... | ... | 4 | 11 | 18 | 25 | ... | 23 | 30 | 7 | 14 |
| புதன்... | ... | 5 | 12 | 19 | 26 | ... | 24 | 1 | 8 | 15 |
| வியா ... | ... | 6 | 13 | 20 | 27 | ... | 25 | 2 | 9 | 16 |
| வெள்... | ... | 7 | 14 | 21 | 28 | ... | 26 | 3 | 10 | 17 |
| சனி ... | 1 | 8 | 15 | 22 | ... | 20 | 27 | 4 | 11 | ... |

### விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்ப வேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செல வுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக் கடுத்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.